முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விகாரி சித்திரை மாதம் 29ம் திகதி முதல் வைகாசி மாதம் 5ம் திகதி வரை மே 12ம் திகதி முதல் மே 19ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** **தயவும் தன்னார்வ தொண்டும் மிகுந்து**
**தரணி போற்றும் தமிழகம் பாரதமே**
**தயவுபட சுப்பிரமணியர் யானும்**
**தமிழகம் இந்தியா தன்னில்**

**2.** **தன்னிலே விகாரி தகர் திங்களில்**
**தாமுரைக்க இருபான் நவதிகதி மேல்**
**நன்னயமாய் விடை திங்கள் பஞ்ச திகதி வரை**
**(விகாரி வருடம் சித்திரை மாதம் 29ம் நாள் 12.05.2019, ஞாயிறு முதல் வைகாசி மாதம் 5ம் நாள் 19.05.2019, ஞாயிறு முடிய)**
**நடக்கும் நிகழ்வாக எதிர்கால பலனை**

**3.** **பலனை வார ஆசியாக உரைப்பேன்**
**பாரதம் தன் சில பகுதி தன்னில்**
**பலமான பேரிடரால் பாதிப்பும்**
**பாதுகாக்க முடியா தவிப்பும் காணும்**

**4.** **காணுமே இயற்கை வழி சிக்கலும்**
**கட்டுப்படா காற்று மூலம் இடரும்**
**ஞானபூமி தானதரும பூமியென**
**நம்பிக்கை இறைவன் மேல் வைத்த பூமியென**

**5.** **என சில எல்லை தவிர**
**இயற்கையால் துன்பம் ஏற்படும்**
**தனபலமென தன் வல்லமை**
**தயவிலா காட்டும் தலைகளும் கூட**

**6.** **தலைகளும் கூட காணாது போகும்**
**தமிழகம் ஆளுமை தானும்**
**பிழைபடா சேவை தொடர்ந்தால் தான்**
**பெருமைபட பதவி தொடர நேரும்**

7. நேருமைபட செயல் திட்டங்கள்
நிலவுலகில் தமிழகம் வளரும்படி
உருவாக்கப்பட்டு ஊழல் என்பதின்றி
உயர்வான களம் கண்டால்தான்

8. தன்னிலே தமிழக மக்களிடை
தமிழ் மண்ணில் தனித்துவம் பெற நேரும்
அண்ணல் ஞானி அரங்கமகான்
அருட்சேவை மார்க்கம் அறிந்து வரும்

9. வருகின்ற ஆளுமைகள் மட்டுமே
வல்லமை பெறும் வளர்ச்சி பெறும்
தருகின்ற மக்களின் ஆதரவை
தன்னலமிலா தேசநலம் கருதி

10. கருதி சேவை ஆற்றுதல் புரிய
கட்டாயம் பரதம் தமிழகம்
முருகப்பெருமான் என் தயவுபட
முழுமை பாதுகாப்பும் சிறந்த ஆளுமையும் பெறும் வார ஆசி முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விகாரி வருடம் சித்திரை மாதம் 29ம் நாள் 12.05.2019, ஞாயிறு முதல் வைகாசி மாதம் 5ம் நாள் 19.05.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

தயவு உணர்வும் தன்னார்வ தொண்டுள்ளமும் மிகுந்து காணப்படுகின்றதும் உலகமே போற்றும்படியான அன்பு மிக்கதான தமிழகத்திலும் பாரத தேசத்திலும் விகாரி வருடம் சித்திரை மாதம் 29ம் நாள் 12.05.2019, ஞாயிறு முதல் வைகாசி மாதம் 5ம் நாள் 19.05.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

பெருமைமிகு பாரத தேசத்தின் சில பகுதிகளில் இயற்கையின் பேரிடர்களால் பலமான பாதிப்புகளும் அரசினால் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு காற்றினாலும் துன்பங்கள் நாட்டு மக்களுக்கு வருவதும் கூடும். ஞானத்தினை நாடிச் செல்லும் மக்கள் வசிக்கின்ற ஞானபூமியிலும் தானதருமங்களே தம்மைக் காக்கும் என தானதருமத்தின் மீது நம்பிக்கை கொண்டு தானதருமங்களை செய்து, தருமபலம் பெருக்கிய பகுதிகளும், இறைவன் மீது நம்பிக்கை வைத்து பக்தி செலுத்திய, பக்தி விசுவாசமுள்ள பகுதிகளும், இந்தவித இயற்கையின் இடர்களால் பாதிக்கப்படாமல் தர்மபலத்தாலும், ஞானபலத்தாலும், இறையருளாலும் பாதுகாப்பை பெறும் ஏனைய பகுதிகள் இயற்கையின் துன்பத்திற்கு ஆளாக நேரிடும்.

தம்மிடம் உள்ள பொருளே தமது பலம் என, பொருள் பற்று கொண்டு பொருளை பெரிதாக மதித்து பொருள் பற்றினால் மக்களின் மீது, தயவு காட்டாமல் தயவற்ற வாழ்வை, தருமம் இல்லாத வாழ்வினை வாழ்கின்ற தலைமைகள் கூட தம்மிடம் உள்ள பொருளால் பாதுகாக்கப்பட முடியாமல் போய் காணாமல் போக நேரிடும்.

தமிழகத்தில் உள்ள ஆட்சியாளர்கள் இனிமேலும் பிழைபடாது தருமத்தின் நெறியில், தயவின் நெறியில், தன்னலம் இல்லாமல் பொதுநலமாய் சேவை மனப்பான்மையுடன் செயல்பட்டால் அவர்களது பதவி அவர்களுக்கு தொடர்ந்து நிலைக்கும். அவர்களது செயல்திட்டங்களும் செயல்பாடுகளும் தமிழகத்தின் வளர்ச்சியை அடிப்படையாக கொண்டு செயல்பட்டால்தான், செயல்திட்டங்கள் எல்லாம் தயவினால் மக்களின் நலனை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டு ஊழல் இல்லாமல் உயர்வான நிர்வாகத்தினை நடத்தினால்தான் தமிழக மக்களிடையேயும் தமிழகத்திலும் தனித்துவமான நிலையை பெற முடியும்.

தர்மநெறியாகியதும் சன்மார்க்க வழியினால் ஆனதுமாகிய அண்ணல் ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் அருட்சேவை மார்க்கத்தினை அறிந்து அதன் வழி நடத்தப்படுகின்ற மக்களுக்கு உகந்த தருமநெறி ஆட்சியே வல்லமையுள்ள ஆட்சியாக வளர்ச்சியடையும். நம்பிக்கையோடு இவர் நம்மை காப்பார்கள் என உறுதி கொண்டு ஆதரவளித்த மக்களின் நம்பிக்கையை ஆதரவினை தன்னலம் இல்லாது தேசநலனிற்காகவே பயன்படுத்தி நாட்டு மக்கள் நலமுடன் வாழ வகை செய்திடும் முறையில் ஆட்சி நடத்தி மக்களுக்கு சேவையாய் ஆட்சி புரிந்திட்டால் உறுதியாக பாரததேசமும் தமிழகமும் முருகப்பெருமான் எனது தயவினை பெற்று எமது முழுமையான அருள் பாதுகாப்பையும் பெற்று சிறப்பான ஞானஆட்சியை பெற்றிட்ட தேசங்களாக விளங்கிடும் எனக் கூறுகிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–

www.agathiar.org மற்றும் www.agathiar.in ல் அரங்கமகா தேசிகரின் செயல்பாடுகளை காணலாம். அரங்கரைப் பற்றி அறிந்து கொள்ள www.youtube.com ல் arangar tv என்ற சேனலிலும் www.arangartv.com லும் காணொளியாக காணலாம். ஆடியோக்களை www.soundcloud.com ல் voice of arangar ல் கேட்கலாம். Mobile Phone : Google Play Store ல் arangar tv App ஐ Download செய்தும் காணலாம். Audio கேட்க soundcloud App ஐ டவுன்லோடு செய்து voice of arangar ல் கேட்கலாம்.